JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - PW- 1 Witness
for Prosecution

CC No. 69/2021 Crime No. - Station -

| | | | |
|---|---|---|---|
| Name | PW-7- கிருஷ்ணன் | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 15th day of October 2025 | | | |

**எதிரிகள் ஆஜர் இல்லை**

**முதல் விசாரணை**

நான் தற்போது கரூர் வைஸ்யா வங்கியின் கோவை மண்டல அலுவலகத்தில் மண்டல மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் 2014ஆம் வருடம் முதல் 2016ஆம் வருடம் வரை கோயம்புத்தூர், நஞ்சப்பா ரோடு ரோட்டில் உள்ள கரூர் வைஸ்யா வங்கியின் கிளை மேலாளராக பணிபுரிந்து வந்தேன். நான் நஞ்சப்பா ரோட்டில் உள்ள கரூர் வைஸ்யா வங்கியின் கிளை மேலாளராக பணியில் இருந்த போது கடந்த 2015 ஆம் வருடம், டிசம்பர் மாதம் ஆப்பக்கூடல் காவல் ஆய்வாளர் அவர்கள் துளசிதாஸ் என்பவர் எங்கள் வங்கியில் கணக்கு வைத்துள்ள வங்கிக் கணக்கில் வரவு செலவு பட்டியலை கேட்டு வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். அதன்படி நான் 2015 ஆம் வருடம், செப்டம்பர் மாதத்திற்கான வரவு செலவு பட்டியலை அவரிடம் கொடுத்தேன். கடனை 07.09.2015ஆம் தேதியன்று துளசிதாஸ் அவரது வங்கிக் கணக்கில் இருந்து Kian Fin Services என்ற வங்கி கணக்கு ரூ.20,00,000/- செலுத்தியுள்ளார்/ தற்போது என்னிடம் காட்டப்படும் வங்கி வரவு செலவு பட்டியல் தான் நான் புலன் விசாரணை அதிகாரியிடம் கொடுத்தது. எனது கையொப்பமிடப்பட்ட வங்கி கடிதத்துடன் கூடிய வங்கி வரவு செலவு பட்டியல் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு தொடர்பாக புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

07.09.2015 தேதியில் அனுப்பப்பட்ட வங்கி பரிவர்த்தனையானது எந்த முறையில் அனுப்பப்பட்டது என்றால், RTGS முறையில் அனுப்பப்பட்டது. அதே தேதியில் சந்திரமோகன்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.10.15 17:58:37 +0530

துளசிதாசுக்கு ரூ.20,00,000/- அனுப்பி உள்ளார் என்றால், சரிதான். அந்த பணத்தை வைத்து தான் துளசிதாஸ் பணத்தை Kian Fin Services நிறுவனத்திற்கு அனுப்பி உள்ளார் என்றால், சரிதான். மேற்படிரூ.20,00,000/- பணமானது Kian Fin Services நிறுவனத்திற்கு துளசிதாசின் வேண்டுகோளின் பெயரில் தான் அனுப்பப்பட்டது என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வங்கி விவரம் பட்டியலில் ரமேஷ்குமார் மற்றும் மகேஷ்குமாருக்கு அனுப்பப்பட்டதாக பணம் எதுவும் இல்லை என்றால், சரிதான்.

வாடிக்கையாளர் கொடுக்கும் வேண்டுதல் கடிதத்தின் அடிப்படையில் கணக்கு எண் மற்றும் அவர்களது பெயர் மற்றும் விவரம் சரியாக உள்ளதா என்று பார்த்து தான் பணம் அனுப்ப வேண்டும் என்றால், சரிதான். காவல்துறை வேண்டுகோள் கடிதத்தின் பேரில் நான் 05.02.2016 தேதி அவர்களுக்கு பரிவர்த்தனை விவரம் கொடுத்தேன். அதன் பின்னிட்டு 4 வருடம் கழித்து தான் என்னை போலீசார் விசாரித்தார்கள் என்றால், சரிதான்.

**3, 6 மற்றும் 7 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.10.15 17:58:44 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani